1972 ஆகஸ்ட் 25]

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister when the Housing Corporation would be started ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : எல்.ஐ.சி. மூலமாகக் கடன் உதவி கேட்டபொழுது அவர்கள் இப்பொழுது அப்பொழுது என்று சொல்லி கடைசியாக செப்டம்பர் மாதத்திலே பேச்சுவார்த்தை தொடங்குவ தாக இருக்கிறார்கள். அந்தப் பேச்சுவார்த்தைகள் நடந்து அவர்கள் இல்லையென்றால் அதற்குப் பிறகு சிண்டிகேட் பேங்கோடு பேச்சு வார்த்தை கள் நடத்த இருக்கிறோம். அவர்கள் 1 கோடி ரூபாய் கடன் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எல்.ஐ.சி.யுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்கள் இல்லை என்று முடிவாகக் சொல்லி விட்டால் அதற்குப் பிறகு சிண்டிகேட் பேங்கோடு பேச்சுவார்த்தை நடத்தியபிறகு முடிவு எடுக்க இருக்கிறோம்.

பெரியதாளை ஆளிப்பாறை

* 338 வினா—திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், பெரியதாளை கடலில் இருக்கிற ஆளிப்பாறையை (coral reaf) உடைத்து, மீனவர்களுக்கு வசதியான வழி துலக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆம்.

ஏழை மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்கல்

* 339 வினா—திரு. தி. ஓ. பெரியசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துவக்கப்பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இலவச மாக புத்தகங்கள் வழங்கும் திட்டம் அவிநாசி தொகுதியில் நடப்பு ஆண்டு மார்ச் மாதம்தான் அமுல்படுத்தப்பட்டது என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், காலதாமதத்தை தவிர்க்க அரசு மேற்கொண் டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இத்திட்டம் அவினாசி தொகுதியில் நடப்பு ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்பே அமுல் நடத்தப் பட்டது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

தட்டப்பாறை மைனர் சிறைச்சாலை

* 340 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—